# தருமபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர் செய்திகள்

## பிளாஸ்டிக்கில் உள்ள வேதிபொருட்களால் நிலம், நீரின் தன்மை பாதிக்கிறது

- பிளாஸ்டிக் தவிர்க்க ஆட்சியர் வேண்டுகோள்

கிருஷ்ணகிரி

பிளாஸ்டிக்கில் உள்ள வேதி பொருட்களால் நிலம், நீரின் தன்மை பாதிக்கப்படுகிறது. எனவே பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்க்க வேண்டும் என ஆட்சியர் அறிவுறுத்தினார்.

கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில் மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம், ஊரக வளர்ச்சித்துறை சார்பாக பிளாஸ்டிக் ஒழிப்பு மற்றும் பிளாஸ்டிக் முற்றிலும் தவிர்க்கும் பொருட்டு விழிப்புணர்வு பேரணி நடந்தது. கோட்டாட்சியர் சாந்தி முன்னிலை வகித்தார். பேரணியை ஆட்சியர் பிரபாகர் கொடியசைத்து தொடங்கி வைத்து கூறியதாவது:

நாட்டில் உற்பத்தியாகும் பிளாஸ்டிக் கழிவுகளில் 60 சதவீதம் பிளாஸ்டிக் கழிவுகள் மட்டுமே சேகரிக்கப்பட்டு மறு சுழற்சிக்குள்ளாக்கப்பட்டு வெவ்வேறு வகையான பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. மீதமுள்ள பிளாஸ்டிக் கழிவுகள் குறிப்பாக மெல்லிய பிளாஸ்டிக் தூக்கு பைகளும், பிளாஸ்டிக் கப்களும் தரையில் சிதறுண்டோ அல்லது குப்பை குவியல்களுடன் சேர்ந்து சுற்றுச் சூழலுக்கு சீர்கேட்டை விளைவிக்கின்றன. குறிப்பாக பிளாஸ்டிக் பொருட்கள் மக்குவதில்லை. நிலத்தில் போடப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் பூமிக்குள் நீர் புகாமல் தடுத்து விடுகின்றன. பிளாஸ்டிக் கழிவுகள் திறந்த சாக்கடை மற்றும் கழிவு நீர் கால்வாய்களில் போடப்படுவதால் அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் தேங்கி தொற்று நோய் கிருமிகளும் உற்பத்தியாகின்றன.

பிளாஸ்டிக்கில் உள்ள வேதி பொருட்கள் நிலத்தின் தன்மையையும், நீரின் தன்மையையும் பாதிக்கின்றன. மெல்லிய பிளாஸ்டிக் பையில் கட்டப்பட்ட எஞ்சிய உணவு பொருட்களை வீசும்போதும், விலங்குகளும் கால்நடைகளும் உணவுடன் சேர்ந்து பைகளையும் உண்ணுகின்றன. துணி காகிதம் மற்றும் சணல் பைகளை பயன் படுத்துங்கள். தென்னை காகிதம் மற்றும் கண்ணாடி டம்ளர்களை பயன்படுத்துங்கள். உணவு பொருட்களை கட்டவும் சாப்பிடவும், வாழை இலை மற்றும் மந்தார இலையை பயன்படுத்துங்கள் என்றார்.

பேருந்து நிலையத்தில் தொடங்கிய விழிப்புணர்வு பேரணி, பெங்களூரு சாலை வழியாகச் சென்று அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நிறைவடைந்தது. இதில் பள்ளி மாணவ, மாணவிகள் உட்பட 800 பேர் கலந்து கொண்டனர்.



▲ கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில் பிளாஸ்டிக் முற்றிலும் தவிர்க்கும் பொருட்டு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை ஆட்சியர் பிரபாகர், பொதுமக்களிடம் வழங்கினார்.